©
தமிழ்நாடு அரசு
2026

பதிவு எண் 33

# கள்ளக்குறிச்சி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

கள்ளக்குறிச்சி, செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 10, 2026.

எண் 5 ] தை 27, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு 2057.

## மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கை

ந.க.எண்.அ2/1844/2024, நாள் : 09-02-2026

**கள்ளக்குறிச்சி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு**

**1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4(1)ன் கீழ் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் இறுதி அறிவிக்கை**

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேந்தமங்கலம் ஊராட்சி 14 பாதூர் ஊராட்சியிலிருந்து 2 ஆக மொத்தம் 16 குக்கிராமங்களை கொண்டு 5 ஊராட்சிகளாக கீழ்கண்ட விபரப்படி மறுசீரமைப்பு செய்து அரசாணை (நிலை) எண்.344, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (ப.ரா.2(1)) துறை, நாள்.05-12-2025)-ன் படி அரசாணை வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.45, நாள்.16-12-2025-ன்படி, மாவட்ட அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டது.

மேற்காண் அரசிதழ் மீது 31-12-2025 அன்று சேந்தமங்கலம் ஊராட்சியில் மாரனோடை பிள்ளையார் கோவில் அருகில் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், பரிசீலினை செய்யப்பட்டு இறுதி அறிவிக்கையினை கள்ளக்குறிச்சி மாவட்ட அரசிதழில் வெளியிட அனுமதி கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் கடிதம் நக.எண்.12876280/ப.ரா.2(1)/2026-4, நாள்.04-02-2026-ல் வழங்கப்பட்ட அனுமதியின்படி, கீழ்காணும் விபரப்படியாக இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியம் | ஊராட்சியின் பெயர் | அரசாணையின்படி | | இறுதி அறிவிக்கையாக வெளியிடப்படும் புதிய ஊராட்சிகள் (குக்கிராமங்களின் எண்ணிக்கையுடன்) |
|---|---|---|---|---|---|
| | | | புதியதாக உருவாக்கப்பட்ட கிராம ஊராட்சியின் பெயர் (குக்கிராமங்களின் எண்ணிக்கையுடன்) | குக் கிராமங்களின் பெயர் | |
| 1 | திருநாவலூர் | சேந்தமங்கலம் ஊராட்சி (14 குக்கிராமங்கள்), பாதூர் ஊராட்சி (2குக்கிராமங்கள் மட்டும்) | 1.சேந்தமங்கலம் (3) | சேந்தமங்கலம் | சேந்தமங்கலம் (3) |
| | | | | சேந்தமங்கலம் பழைய காலனி | |
| | | | | சேந்தமங்கலம் புதிய காலனி | |
| | | | 2.மைலங்குப்பம் (4) | மைலங்குப்பம் | மைலங்குப்பம் (4) |
| | | | | திம்மிரெட்டிப் பாளையம் | |
| | | | | திம்மிரெட்டிப் பாளையம் காலனி | |
| | | | | கிருஷ்ணாரெட்டிப் பாளையம் | |
| | | | 3.பெரிய மாரனோடை (3) | பெரியமாரனோடை | மாரனோடை (3) |
| | | | | சின்னமாரனோடை | |
| | | | | அம்சாநகர் | |
| | | | 4.பெரியக்குப்பம் (4) | பெரியக்குப்பம் | பெரியக்குப்பம் (4) |
| | | | | ஏரிவண்டிப் பாளையம் | |
| | | | | வண்டிப்பாளையம் | |
| | | | | வண்டிப்பாளையம் காலனி (பாதூர் ஊராட்சியிலிருந்து) | |
| | | | 5.சின்னக்குப்பம் (2) | சின்னக்குப்பம் | சின்னக்குப்பம் (2) |
| | | | | சின்னக்குப்பம் (பாதூர் ஊராட்சியிலிருந்து) | |

மேற்காணும் இந்த இறுதி அறிவிக்கையானது இம்மாவட்டத்தில் தேந்தெடுக்கப்பட்டுள்ள ஊரக உள்ளாட்சி பதவிகளுக்கான பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் ( CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்களும் நடைமுறைப்படுத்தப்படும்.

கள்ளக்குறிச்சி,
2026 பிப்ரவரி 9.

எம்.எஸ். பிரசாந்த்,
*ஊராட்சிகளின் ஆய்வாளர் /*
*மாவட்ட ஆட்சித்தலைவர்,*
*கள்ளக்குறிச்சி.*

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் விருத்தாசலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.